**<u>கோ.ம.சா.3–கோமதி</u>      <u>L.A.O.P.No.438/2022</u>                    10.10.2025**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

நில எடுப்பு தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆர்ஜிதம் செய்தது சம்பந்தமாக நான் 2021ல் விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் 2021ம் ஆண்டு விசாரணைக்கு ஆஜரானபோது நான் கொடுத்த ஆவணங்களை மட்டும் பார்த்தார்கள். என்னை வேறு விசாரணை ஏதும் செய்யவில்லை. நான் மேற்படி சிப்காட் அலுவலகத்தில் விசாரணைக்கு 4 அல்லது 5 தடவை சென்றேன். தாவா ஆர்ஜித சொத்தை எனக்கு பாத்தியப்பட்டு நான் அனுபவித்து வந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்களை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் சிப்காட் அலுவலகத்தில் என்னுடைய பாட்டி எனது தாயாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை கொடுத்தேன். இந்த தாவா சொத்தை எனது தாயார் கருப்பம்மாளோ, நானோ அனுபவித்ததற்கு தனிவட்டாட்சியரிடம் பட்டாவோ, தீர்வை ரசீதோ கொடுத்தேனா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. தாவா வழக்கில் என் தாயார் பெயரிலோ, எனது பெயரிலோ பட்டா ஏற்படுத்தி தீர்வை செலுத்தி அனுபவித்து வந்ததற்கான ஆவணங்களை கொடுத்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தாயாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாவா சொத்தை ஆர்ஜிதம் செய்ய தனி வட்டாட்சியர் நடவடிக்கை எடுத்த பின்புதான் கோ.சா.ஆ.5 மற்றும் கோ.சா.ஆ.6 ஆவணங்களை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் கருப்பம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாவா ஆர்ஜித நிலத்திற்கான நஷ்ட ஈடு தொகையை உரிய நபர்கள் பெற்றுவிடக்கூடாது என்பதற்காக நான் சில நபர்கள் தூண்டுதலின்பேரில் கோ.சா.ஆ.5 மற்றும் கோ.சா.ஆ.6 ஆகியவற்றை வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சிப்காட் அலுவலகத்தில் விசாரணையின் போது 2010 ல் ஆர்ஜித நிலத்தை பொறுத்து 2 கிரையங்கள் வாங்கியுள்ள விபரத்தை பற்றி தெரிந்து கொண்டதாக

விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சித்தப்பாவின் மனைவி பெயர் வேலம்மாள். எனது சித்தப்பாவிற்கு மோகன், பாரதி என்ற மகள், பாஸ்கரன், தமிழரசன், சாந்தி மற்றும் ஜீவா ஆகியோர்கள் வாரிசு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 16.12.2009 கிரைய ஆவணத்தில் கிரையதாரர்களான எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகள் கிரையம் கொடுப்பவர்களாக கண்டு கிரைய ஆவணம் ராமகிருஷ்ணன் மற்றும் மாரியப்பன் கிரையம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் தாவா சொத்தை பொறுத்து கிரையம் எழுதப்பட்டுள்ளது. அது அவர்கள் சொத்து இல்லை. அந்த **அசல் கிரைய ஆவணம் எ.ம.சா.ஆ.1** ஆகும். எ.ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் எனது சித்தியும் மற்றும் சித்தி வாரிசுகளும் ஸ்ரீவில்லிபுத்தூரில் குடியிருப்பதாக கருதி கிரையம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் கிரையம் பெற்றவர் கிரையத் தொகையை கொடுத்து கிரையம் பெற்றுள்ளதாக கண்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரையம் எழுதிய விபரம் நான் சிப்காட் அலுவலகத்திற்கு சென்ற போது எனக்கு தெரிய வந்ததா என்றால் தெரியவந்தது. அதன்பிற்கு எனது சித்தியிடம் போய் கிரைய ஆவணம் சம்பந்தமாக கேட்டேனா என்றால் அவர்கள்தான் என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களிடம் தாவா சொத்தை ஏன் கிரையம் செய்தீர்கள் என்று கேட்டேனா என்றால் என் சொத்தை அவர்கள் தெரியாமல் கிரையம் செய்து விட்டதாக தெரிவித்தனர். எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகள் எப்போது எனது வீட்டிற்கு வந்தார்கள் என்ற விபரம் பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகள் கிரையம் எழுதிய பிறகு 6 மாதங்கள் கழித்து வந்தார்களா என்றால் வந்தார்கள். அவர்கள் என்னை அழைத்தார்கள். அவர்கள் என்னுடன் வா, உன் சொத்தை வாங்கி தருவதாக சொன்னார்கள்.

எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகள் வந்த நாளன்று மேற்படி விபரத்தை சொல்லிவிட்டு அன்றே சென்று விட்டார்கள். மேற்படி விபரத்தை எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகள் சொல்லும்போது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் என் அண்ணன் வாரிசுகள் இருந்தார்கள். எனது அம்மாவின் அக்கா மகன் எனது அண்ணன். அவர் இறந்து விட்டார். அவரது பிள்ளைகள் இருக்கிறார்கள். அவரது பிள்ளைகள் எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகளிடம் தாவா சொத்தில் உள்ள வில்லங்கத்தை தீர்த்துக் கொடுக்கும்படி கேட்டார்களா என்றால் அவர்கள் ஒன்றும் கேட்கவில்லை. மேற்படி கிரையம் எழுதிய பிறகும் எனது சித்தி மற்றும் சித்தியின் பிள்ளைகளுடன் நல்ல உறவு நிலையில்தான் இருந்து வந்தோம் என்றால் நல்லது கெட்டதுக்கு சொல்வார்கள். போவோம். எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகள் தாவா சொத்தில் உள்ள வில்லங்கத்தை தீர்த்துக் கொடுப்பதாக சொல்லிய பின்பு நான் அவர்களிடம் எ.ம.சா.ஆ.1 கிரைய வில்லங்கத்தை தீர்த்து கொடுக்கும்படி எதுவும் கேட்கவில்லை. எ.ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை பொறுத்து தீர்த்து கொடுக்க வேறு மத்தியஸ்தர்கள் யாரிடமும் சொல்லவில்லை. தாவா சொத்தை எ.ம.சா.ஆ.1 எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகளும் மோசடியாக எழுதி பெற்ற நபர்களான ராமகிருஷ்ணன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்களிடம் மோசடி கிரையம் என்று தீர்த்து கொடுக்கும்படி கேட்டேனா என்றால் அவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகள் எ.ம.சா.ஆ.1 பத்திரம் எழுதிய பின்பு அது மோசடி பத்திரம் என்று காவல் துறையிடம் புகார் கொடுத்தோ வேறு சட்ட நடவடிக்கை எடுத்தோ நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் இல்லை. எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகள் எழுதிக் கொடுத்த எ.ம.சா.ஆ.1 ஆவணத்தை பொறுத்து நான் சிப்காட் அலுவலத்தில் விசாரணையில் தனி வட்டாட்சியர் தெரிவித்ததை தெரிந்து கொண்டேன்.

மேற்படி சிப்காட் அலுவலகத்தில் மேற்படி விபரம் தெரிந்து கொண்ட பின்பும் எ.ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை ரத்து செய்ய நான் நேரடியாகவோ, என் உறவுக்காரர்கள் மூலமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றும், அந்த சொத்தை பொறுத்து பின் வில்லங்கம் ஏதும் செய்தால் அது என்னை கட்டுப்படுத்தாது என்று நான் எச்சரிக்கை விளம்பரம் நாளிதழ் மூலமாக பிரசுரம் செய்யவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 ஐ கிரையம் பெற்ற ராமகிருஷ்ணன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள் முருகன் என்பவருக்கு தாவா சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் தெரியும். ஆனால் அவர்கள் உரிய சொத்துக்காரரிடம் வாங்கவில்லை என்று மாறி மாறி எழுதிக் கொண்டார்கள். எ.ம.சா.ஆ.1 ஐ கிரையம் பெற்ற நபர்கள் மறு கிரையம் செய்த விபரம் எனக்கு தெரியாது. எ.ம.சா.ஆ.1 ஐ கிரையம் பெற்ற நபர்களிடம இருந்து கிரையம் பெற்ற முருகன் தாவா சொத்தை 2, 3 கோருரிமையாளர்களுக்கு எழுதிக் கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சிப்காட் அலுவலகத்தில் விசாரணைக்கு சென்ற போது 2, 3 கோருரிமையாளர்கள் தாவா சொத்தை பொறுத்து உரிமை கோரி கிரைய ஆவணங்கள் கொடுத்துள்ளார்கள் என்று தெரிவித்த விபரங்களை தெரிந்து கொண்டேன். நான் சிப்காட் அலுவலகத்திற்கு விசாரணைக்கு சென்று 2, 3 கோருரிமையாளர்கள் கிரையம் பெற்ற விபரம் தெரிந்து கொண்ட பின்பு அவர்களிடம் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று தெரிவித்தீர்களா என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. இந்த தாவா சொத்து சம்பந்தமாக பாத்தியமில்லாத எனது சித்தி மற்றும் சித்தியின் வாரிசுகள் கிரையம் செய்ததாக கூறும்நிலையில் அந்த பத்திரத்தின் நகலை நான் எடுத்து பார்த்தேனா என்றால் நான் பத்திர பதிவு அலுவலகத்தின் நகல் எதுவும் எடுத்து

பார்க்கவில்லை. நான் பத்திரத்தின் நகலை எடுத்து பார்க்கவில்லை என்றாலும், நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்கான கிரையங்கள் ஏற்பட்டதை பொறுத்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதில் உள்ள விபரங்கள் பற்றி நான் சொல்லவில்லை. வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கிரைய ஆவணங்களின் நகலை நான் எதுவும் எடுக்கவில்லை. முதல் விசாரணையில் சொல்லியுள்ள ஆவணங்களை பற்றி யார் எடுத்து கொடுத்தார்கள், எங்கு எடுத்து கொடுத்தார்கள் என்ற விபரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கில் கண்ட தொகை நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு உரிய ஆவணங்களை தாக்கல் செய்யாததால் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டார்கள் என்று சொன்னால் நான் ஆவணங்களை ஒவ்வொன்றாக கொடுத்ததால் அனுப்பி விட்டார்கள். 2, 3 கோருரிமையாளர்கள் தாவா சொத்தினை கிரையம் வாங்கியது பற்றியும், அதற்கு முன்பாக வாங்கிய கிரையம் வாங்கியது பற்றியும், அதனை ரத்து செய்வதற்கும் நான் நீதிமன்றம் மூலம் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து முதல் விசாரணையில் பதிவானதாக குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் பாத்தியமில்லாத நபர்களால் எழுதிக் கொடுத்ததை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்காததற்கு வேறு தனிப்பட்ட காரணங்கள் ஏதும் இல்லை. தாவா சொத்தை பொறுத்து சிங்கராஜ் 12.05.2000 ல் கோ.சா.ஆ.8 ன் படி அடமானம் வைத்துள்ளார் என்று நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் நான் தாக்கல் செய்யவில்லை. கோ.சா.ஆ.8 ல் சிங்கராஜ் என்பவர் மணிப்பாறைப் பட்டி கூட்டுறவு விவசாய சங்கத்திற்கு இ.குமாரலிங்கபுரம் கிராம சர்வே எண்.278/29 மற்றும் தாவா சர்வே எண்.265/4 ஆகிய இரண்டையும் சேர்த்து அடமானம் வைத்ததாக சொல்லி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. மேற்படி சிங்கராஜ் எனக்கு எப்படி சொந்தம் என்றால் எனது அப்பா வழியில் தூரத்து

சொந்தம் ஆகும். மேற்படி சிங்கராஜ் இந்த தாவா சொத்தை அடமானம் வைத்து அடமானக்கடனை தீர்த்ததற்கான ரசீது கோ.சா.ஆ.9 ஆக நான் பெற்று தாக்கல் செய்யவில்லை. மேற்படி சிங்கராஜ் என்பவர் கோ.சா.ஆ.10 ன் படி உறுதிமொழி பத்திரம் எழுதி பதிவு செய்ததை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உறுதி மொழி பத்திரத்தில் தாவா சொத்து இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில் பட்டா எண்.186 ன்படி வேலம்மாள் பெயரில் இருந்ததற்கும், மேற்படி வேலம்மாள் காலமான பின்பு வாரிசு முறைப்படி வாய்மொழி பாகம் படி சோலைச்சாமி தேவருக்கு கிடைத்த சொத்தை தவறுதலாக சிங்கராஜ் என்பவர் அடமானம் வைத்ததாக சொல்லி உறுதிமொழி பத்திரம் கோ.சா.ஆ.10 ல் எழுதி கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சித்தப்பா ஏற்கனவே விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டார். வாய்மொழி பாகம் இல்லை. இந்த தாவா சொத்து சண்முகவேலம்மாள் என்பவர் எனது அம்மா கருப்பம்மாளுக்கு செட்டில்மெண்ட் சொத்து மணிப்பாறைப்பட்டியில் உள்ள சொத்து என்றால் மணிப்பாறைப்பட்டிதான். ஆனால் அது இ.குமாரலிங்கபுரம் போகும் வழியில் உள்ளது. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள கோ.சா.ஆ.2, 4 மற்றும் 7 ஆகிய சொத்திற்கும், ஆர்ஜித சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது பாத்தியமில்லாத சொத்தை பொறுத்து, எனது உறவினர்களின் தூண்டுதலின் அடிப்படையில் ஆவணங்களை உருவாக்கி அவ்வாறு நான் பொய்யாக கட்சி செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த ஆவணமும் உற்பத்தி செய்யவில்லை. கோ.சா.ஆ.7 விடுதலை பத்திரத்தில் தாவா சொத்தை பொறுத்து ஏதும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் எந்த சொத்தும் வேண்டாம் என்று எழுதிக் கொடுத்துள்ளார். எனது சித்தப்பா எனது அப்பாவிற்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுக்கும்போது தாவா ஆர்ஜித

சொத்து எனது பாட்டி சண்முகவேலம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது பாட்டி எனது அப்பாவுக்கு எந்த ஆவணமும் எழுதித்தரவில்லை என்றால் எனது அம்மாவுக்குத்தான் எழுதிக் கொடுத்தார். எனது தாயாருக்கு எனது பாட்டி இந்த தாவா சொத்தை பொறுத்து எழுதிக் கொடுத்ததாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். எனது சித்தியின் வாரிசுகளிடம் தாவா சொத்தில் உள்ள கிரையங்களை பொறுத்து தீர்த்து கொடுக்கும்படி நாளது வரை எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். 2, 3 கோருரிமையாளர்கள் உரிய நபர்களிடம் நல்லெண்ண கிரையதாரர்கள் என்ற அடிப்படையில் கிரையம் பெற்று அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்தில் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்று தெரிந்து உறவினர்கள் தூண்டுதலின்பேரில் பொய் கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் 2, 3 கோருரிமையாளர்கள் மட்டுமே உரிமையான நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்திற்கு எனது பேரனுடன்தான் வருவேன் என்று சொன்னால் எனது பேரனும் வருவார். மற்றவர்களும் வருவார்கள்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.